DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.306/2025**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ராஜேந்திரன் | கிராமம் : | |
| அப்பா பெயர் : | பிச்சை | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2025

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் வளையார்பாளையத்தில் குடியிருந்து விறகு வெட்டும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆகும். சுப்பிரமணி எனது அண்ணன். ஆஜர் எதிரி எனது அண்ணன் மகன் ஆவார். 10.01.2023 ம் தேதி காலை 11.00 மணிக்கு நானும் எனது மனைவி, மற்றும் எனது அண்ணன் சுப்பிரமணி புளியமரத்துக்கு அருகில் உள்ள நிலத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தோம்.

2. அப்போது எதிரி ஏண்டா இந்த நிலத்தை சுத்தம் செய்கிறாய் என்று அரிவாளை எடுத்து வெட்டினார். வெட்டாதே என்று சொன்னேன். என்னை வலது, இடது நெற்றியிலும், தலையிலும் வெட்டிவிட்டார். வலது கை ஆட்காட்டிவிரலிலும் வெட்டிவிட்டார். எனது மனைவி என்னை வெட்டாதே என்று தேக்க வந்தபோது வலது கைஆட்காட்டிவிரலிலும், இடது கை மோதிரவிரலிலும் அரிவாளால் வெட்டிவிட்டார்.

3. என் மீதும் என் அண்ணன் மீது எதிரி எழுந்திருக்க விடாமல் படுத்துக்கொண்டார். பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த வேலையாட்கள்வந்தார்கள். அங்கு வேலை செய்து கொண்டிருந்த சரவணனும்

ரவியும் வந்து குளித்தலை GHல் சிகிச்சைக்கா சேர்த்தாகள். போலிசார் என்னை விசாரித்ததார்கள். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 அரிவாள் தான் எதிரி என்னையும், எனது மனைவியும் வெட்டிய அரிவாள் ஆகும்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நானும், எனது மனைவியும் அண்ணனும் இருந்தோம என்றால் சரிதான் கிழக்குப்பக்கம் கூலியாட்கள் இருந்தார்கள். 4 1/2 ஏக்கர் நிலம் யாருடையது என்றால் எனது அம்மாவுடையதாகும். மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தார்கள். எனது அம்மாவின் நிலம் என்பதற்கு எந்த ஆவணமும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது அண்ணன் பெயர் நடேசன் ஆகும் அவர் எதிரியின் தந்தை ஆவார். எதிரி தந்தை ராணுவத்தில் இருந்தார்.

2. எனது அண்ணன் நடேசன் ராணுவத்தில் சிறப்பாக பணி புரிந்ததற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிலம் தான் என்றால் சரிதான். அந்த 4 1/2 ஏக்கர் நிலம் என்றாலும் அது அவரது பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. நடேசன் இறப்பதற்கு முன்பு நடேசன், எதிரி ஆகியோர்கள் திருச்சியில் குடியிருந்தார்கள். நடேசன் திருச்சியில் இருந்த போது எனது அண்ணன் சுப்பிரமணி அந்த நிலத்தை பயன்படுத்தினோம் என்றால் சரிதான்.

3. எதிரி ரமேஷ் அவரது அப்பா இறந்தபிறகு சித்தலவாயில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். ரமேஷ் அவரது அப்பா இறப்பிற்கு பிறகு அந்த நிலத்தை ரமேஷ் தான் பயன்படுத்தினார் என்றால் சரிதான். ரமேசின் அப்பா நடேசனுக்கு ராணுவத்தில் வழங்கிய நிலத்தில் அனுபவம் செய்து வந்து ரமேஷ் கேட்டு கொண்டு அவருக்கு விட்டுவிட்டு ரமேசின் அனுபவத்தில் உள்ள நிலத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்கு நானும், எனது மனைவி எனது அண்ணன் ரமேசிடம் வீண்தகராறு செய்தே போது முள்காட்டில் விழுந்து நாங்களே காயம் ஏற்படுத்திக்கொண்டு நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. அ.சா.பொ1 அரிவாள் நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் அ.சா.பொ1 க்கும் சம்பந்தம் இல்லையென்றால் சரிதான். மருத்துவரிடம் எங்களை தாக்கியது தெரிந்த ஒரு ஆண்நபர் என்றும் ஒரு

பெண்நபர் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் மயக்கத்தில இருந்தேன். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும நடக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் எழுதாத வெள்ளை பேப்பரில் எனதுமனைவியிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு அவர்களாகவே எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லையென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.15 10:21:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.